# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 238 | 4 Pages | 31.3.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 238 | 4 பக்கங்கள் | 31.3.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## வருமான வரி விவகாரம்.. ஆட்சி மாறினா சம்பவம் உறுதி: ராகுல்



டெல்லி, மார்ச். 31

காங்கிரஸ்தலைவர்ராகுல்காந்திஜனநாயகத்தைஅழிக்கநினைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்து இருக்கிறார். காங்கிரஸ் கட்சிக்கு 1800 கோடி ரூபாய் வருமான வரி செலுத்த நோட்டீஸ் அனுப்பப்பட்டதை அடுத்து, ராகுல் காந்தி இவ்வாறு கருத்து தெரிவித்து இருக்கிறார்.

வருமானவரி நோட்டீஸ் தொடர்பாக கருத்து தெரிவித்த காங்கிரஸ் கட்சி இதனை "வரி தீவிரவாதம்" என்று குறிப்பிட்டது. வருமான வரித்துறை சார்பில் அனுப்பப்பட்ட நோட்டீசில் காங்கிரஸ் கட்சி 201718 மற்றும் 202021 ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் கட்ட தவறியதற்கான வட்டி உள்ளிட்டவை சேர்க்கப்பட்டு இருக்கிறது. இந்த விவகாரம் தொடர்பான எக்ஸ் தளத்தில் ராகுல் காந்தி கருத்து பதிவிட்டுள்ளார்.

அதில், "ஆட்சி மாறும்போது ஜனநாயகத்தை சீர்குலைப்பவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். இதோடு, மீண்டும் ஒருமுறை இதுபோன்ற செயல்களை செய்ய தைரியம் வராத அளவுக்கு கடும் நடவடிக்கைஎடுக்கப்படும். இது எனது உத்தரவாதம்,"என்று குறிப்பிட்டுள்ளார்.

## தொண்டர்களின் கடினமான உழைப்பு, கட்சியை ஆழமான வளர்ச்சிக்கு அழைத்துச் செல்லும் பிரதமர் மோடி



டெல்லி, மார்ச். 31

மக்களவை தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் 19ம் தேதி முதல் 7 கட்டங்களாக ஜூன் 1ம் தேதி வரை நடைபெறுகிறது.

முதற்கட்டமாக ஏப்ரல் 19ம் தேதி ஒரே கட்டமாக தமிழகத்தில் மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணக்கை ஜூன் 4ம் தேதியும், சட்டமன்ற தேர்தலில் இரண்டு மாநிலங்களுக்கு மட்டும் ஜூன் 2ம் தேதி அன்றும் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் திமுக, அதிமுக, பாஜக, நாம் தமிழர் கட்சி என நான்கு முனை போட்டி நடைபெறுகிறது.

தேர்தல் நெருங்கி வருவதால் போட்டியிடும் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக பாஜகவினருடன் இன்று மாலை 5 மணிக்கு 'எனது பூத் வலிமையான பூத்' என்ற தலைப்பில் நமோ ஆப் வாயிலாக பிரதமர் மோடி தனது உரையை தொடங்கினார்.

அப்போது வணக்கம் என தமிழில் உரையை தொடங்கினார் பிரதமர் மோடி.

பின்னர் அவர் பேசியதாவது:

இன்றைய வணக்கம் எனக்கு மிகவும் சிறப்பான ஒன்று. உங்கள் மத்தியில் பேச வாய்ப்பு கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சி. என் வாழ்க்கையின் பெரும் பகுதியை நான் ஒரு சாதாரண தொண்டராகவே கழித்தேன்.

உங்களின் கடினமான உழைப்பு, கட்சியை ஆழமான வளர்ச்சிக்கு அழைத்துச் செல்லும். தமிழ்நாட்டில் உள்ள பெண்களை சென்றடைகிறதா? அது பெண்களுக்குப் பிடித்திருக்கிறதா ?

நாட்டில் பெண்கள் தலைமையிலான வளர்ச்சிக்காக பணியாற்றி வருகிறோம். எங்களுடைய பூத், வலிமையான பூத் என்ற முழக்கத்திற்கு உங்களின் கடின உழைப்பே காரணம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வருமான வரி விவகாரம்: நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்த காங்கிரஸ் அழைப்பு

புதுடெல்லி, மார்ச். 31

வருமான வரித்துறை சார்பில் சுமார் 1,823 கோடி ரூபாய் செலுத்துமாறு காங்கிரஸ் கட்சிக்கு புதிய நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

2017,18 முதல் 202021 வரையிலான மதிப்பீடு மற்றும் அபராதம், வட்டி ஆகியவை தொடர்பாக 1,823 கோடி ரூபாய் கட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையே, இந்த நோட்டீஸ் வரி தீவிரவாதம் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான ஜெய்ராம் ரமேஷ் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். 139 ஆண்டுகால பழமை வாய்ந்த காங்கிரஸ் கட்சியை முடக்க சதி நடக்கிறது என முன்னாள் நிதி மந்திரி ப.சிதம்பரம் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்நிலையில், வருமான வரி விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் கட்சி சார்பில் நாளை நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அக்கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் அறிவித்துள்ளார். அனைத்து மாநில மற்றும் மாவட்ட தலைமை அலுவலகங்களில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்து தரப்பினரும் பங்கேற்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஒரு பக்கம் கண்ணைக் குத்திக்கொண்டே மறுபக்கம் கண்ணீர் வடிப்பது எந்த மாதிரி பாசம்?: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலடி



சென்னை, மார்ச். 31

பிரதமர் மோடி நமோ செயலி மூலம் உரையாற்ற போவதாக எக்ஸ் பதிவில் குறிப்பிட்டிருந்தார். அப்போது பேசிய அவர், "எனக்கு தமிழ் தாய்மொழியாக கிடைக்காதது மிகுந்த வருத்தம் அளிக்கிறது. தமிழில் என்னால் பேச முடியவில்லை என்ற வருத்தம் மனதில் ஆழமாக உள்ளது. தமிழின் பெருமைகளை உரக்க சொல்ல வேண்டும்." என்றார். இந்த நிலையில், பிரதமரின் இந்த பேச்சுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;"நேற்று மாலைச் செய்தி: தாய்மொழியாகத் தமிழ் வாய்க்கவில்லை என வருந்துகிறார் பிரதமர் மோடி! நேற்று காலைச் செய்தி: அழகிய தமிழ்ச்சொல் 'வானொலி' இருக்க ஆகாசவாணி என்பதே பயன்பாட்டுக்கு வரும். மோடியின் கண்ணீரை அவரது கண்களே நம்பாது!. தமிழர்கள் எப்படி நம்புவார்கள்?. கெட்டிக்காரன் புளுகாவது எட்டு நாள் நிற்கும்; ஆனால், மோடியின் கண்ணீர்?. ஒருபக்கம் கண்ணைக் குத்திக் கொண்டே, மறுபக்கம் கண்ணீர் வடிப்பது என்ன மாதிரியான தமிழ்ப் பாசம்?. கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் ஆங்கிலத்தில் பரப்புரை செய்த அவர் இப்போது இந்தியில் மட்டுமே பேசுவதன் மர்மம் என்ன? பிரதமர் மோடி அவர்களே... கருப்புப் பணம் மீட்பு, மீனவர்கள் பாதுகாப்பு, 2 கோடி வேலைவாய்ப்பு, ஊழல் ஒழிப்பு போல் காற்றில் கரைந்த உங்கள் கேரண்டிகளில் ஒன்றுதான், அகவை ஐந்தான விமானங்களில் தமிழில் அறிவிப்பு! விமானங்களில் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் உள்ள விமான நிலையங்களில் கூட தமிழிலோ ஆங்கிலத்திலோ பேசும் பாதுகாப்புப் படையினர் இல்லை."எங்கும் இந்தி!

எதிலும் இந்தி!" என மாற்றியதுதான் மோடி அரசின் அவலச் சாதனை!. தமிழ்த்தோல் போர்த்தி வரும் வஞ்சகர் கூட்டத்துக்கு ஏமாற்றமே பரிசாகும்!" என்று கடுமையாக சாடியுள்ளார்.

## சேலம் வேட்பாளர் செல்வகணபதியை ஆதரித்து வாக்கு சேகரித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்



சேலம், மார்ச். 31

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசார பொதுக்கூட்டங்களில் பங்கேற்று பேசி வருகிறார்.

அதன்படி, சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் இன்று (சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு இந்தியா கூட்டணி சார்பில் பிரம்மாண்ட தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு சேலம் பாராளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் டி.எம்.செல்வகணபதி, கள்ளக்குறிச்சி பாராளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் மலையரசன் ஆகியோரை ஆதரித்து பிரசாரம் செய்கிறார்.

இந்நிலையில் இன்று காலை சேலம் அக்ரஹாரம் பகுதியில் நடைபயணமாக சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அதிகாலை நடைபயிற்சிக்கு பின்னர் மார்க்கெட் பகுதிக்கு சென்ற முதலமைச்சர், அங்குள்ள பொதுமக்களை சந்தித்து பேசினார். தொடர்ந்து தி.மு.க. வேட்பாளர் டி.எம்.செல்வகணபதியை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

## வேட்புமனு வாபஸ் அவகாசம் நிறைவு: தமிழ்நாட்டில் மக்களவை தேர்தல் 2024 சின்னம் ஒதுக்கும் பணியில் தேர்தல் ஆணையம்

சென்னை, மார்ச். 31

தமிழ்நாட்டில் மக்களவை தேர்தலுக்கான வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கால அவகாசம் நிறைவு. நாடு முழுவதும் 7 கட்டங்களாக நாடாளுமன்ற மக்களவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதல் கட்டமாக தமிழகத்தில் 39 தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் ஒரு தொகுதி என மொத்தம் 40 தொகுதிகளுக்கு ஏப்ரல் 19ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதனால், அனைத்து பிரதான கட்சிகளும் கூட்டணி, தொகுதி பங்கீடு, வேட்பாளர் பட்டியலை தொடர்ந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த சில நாட்களுக்கு முன்பு முடிந்த நிலையில், வேட்புமனு பரிசீலினையும் நேற்று முன்தினம் நிறைவு பெற்றது. இந்த சூழலில், வரை வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டில் மக்களவை தேர்தலுக்கான வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கால அவகாசம் நிறைவு பெற்றது. இதனால் கூடிய விரைவில் மக்களவை தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர்கள் பட்டியலை தமிழ்நாடு தேர்தல் ஆணையம் வெளியிடும் என எதிர்பாக்கப்படுகிறது. இதனிடையே, தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும் தாக்கல் செய்யப்பட்ட 1,749 மனுக்களில் 1,090 மனுக்கள் ஏற்று கொள்ளப்பட்டன. 39 தொகுதிகளிலும் ஆண்கள் 1,509 பேர், பெண்கள் 240 பேர் என மொத்தம் 1,749 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது. 1,749 வேட்புமனுக்களில் 650 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,099 வேட்புமனுக்களில் 9 பேர் வாபஸ் பெற்ற நிலையில் 1,090 வேட்புமனுக்களை ஏற்கப்பட்டதாக கூறப்படுகிறது. ஈரோடு தொகுதியில் 8 பேரும், தருமபுரியில் ஒருவரும் வாபஸ் பெற்றுள்ளதாகவும், விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைதேர்லுக்கு 22 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில் 14 மனுக்கள் ஏற்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே, இறுதி வேட்பாளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு அவர்களுக்கான சின்னம் ஒதுக்கீடு பணி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சின்னம் ஒதுக்கீடு தொடர்பாக தேர்தல் ஆணையம் வகுத்துள்ள விதிப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. முதலில் பதிவு செய்ய கட்சிகளுக்கும், பிறகு சுயேட்சை வேட்பாளர்களுக்கும் சின்னம் ஒதுக்கும் பணி விறுவிறுப்பாக நடைபெறுகிறது

## பாரத ரத்னா விருது வழங்கினார் ஜனாதிபதி திரவுபதி மூர்மு

டெல்லி, மார்ச். 31


நாட்டிலேயே மிக உயரிய விருது பாரத ரத்னா விருதாகும். முன் எப்போதும் இல்லாத வகையில், இந்த ஆண்டு ஐந்து தலைவர்களுக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது. அதன்படி, நாட்டின் முன்னாள் துணைப் பிரதமரும், மூத்தத் தலைவருமான எல்.கே. அத்வானிக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது. இதேபோல், மறைந்த பீகார் முன்னாள் முதல்வர் கர்பூரி தாக்கூர், மறைந்த முன்னாள் பிரதமர் சௌத்ரி சரண்சிங், மறைந்த முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்மராவ், தமிழ்நாட்டைச் சேர்ந்த மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆகியோருக்கும் பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் உள்ளிட்ட 4 பேரின் குடும்பத்தினரிடமும், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பாரத ரத்னா விருதை வழங்கி கௌரவித்தார். டெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாரத பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மறைந்த முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கு அறிவிக்கப்பட்ட விருதை, அவரது மகன் பி.வி.பிரபாகர் ராவ் பெற்றுக் கொண்டார்.

இதேபோல், மறைந்த முன்னாள் பிரதமர் சௌத்ரி சரன்சிங்கிற்கு அறிவிக்கப்பட்ட விருதை, அவரது பேரன் ஜெயந்த் சிங் பெற்றுக்கொண்டார். மறைந்த பீகார் முன்னாள் முதல்வர் கர்பூரி தாக்கூருக்கு அறிவிக்கப்பட்ட விருதை, அவரது மகன் ராம்நாத் தாக்கூர் பெற்றுக் கொண்டார். மேலும், தமிழகத்தைச் சேர்ந்த மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு அறிவிக்கப்பட்ட விருதை, அவரது மகள் நித்யா ராவ் பெற்றுக்கொண்டார். வயது மூப்புக் காரணமாக, நாட்டின் முன்னாள் துணைப் பிரதமரும், மூத்தத் தலைவருமான எல்.கே. அத்வானிக்கு, அவருடைய வீட்டிற்கு நேரில் சென்று பாரத ரத்னா விருது வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



# பாராளுமன்ற தேர்தலில் ஏன் போட்டியிடவில்லை?: விளக்கம் அளித்த கமல்ஹாசன்



ஈரோடு, மார்ச். 31

பாராளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் பிரசாரம் செய்யும் அரசியல் கட்சிகள் கொடுத்துள்ள நட்சத்திர பேச்சாளர்கள் பெயர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதில் 29 கட்சிகளைச் சேர்ந்த 640 பேச்சாளர்களுக்கு நட்சத்திர அந்தஸ்துடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சியில் கமல்ஹாசன் பெயருடன் 9 பேர் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், தி.மு.க. தலைமையிலான கூட்டணியின் ஈரோடு பாராளுமன்ற தொகுதி வேட்பாளர் கே.இ.பிரகாஷுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு, மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் ஈரோட்டில் பிரசாரம் தொடங்கினார்.

அப்போது அவர் கூறுகையில், ஈரோட்டில் எனது பிரசாரத்தை தொடங்க பெரியார் ஒரு காரணம். ஈரோட்டில் இடைத்தேர்தலின் போது நான் இங்கே வந்தபோது நீங்கள் காட்டிய அன்பும் மற்றொரு காரணம். பாராளுமன்ற தேர்தலில் நான் போட்டியிடாததற்கு காரணம் தியாகம் என கூறுகிறார்கள். அது தியாகம் அல்ல, வியூகம். தமிழ்நாடு காக்கும் வியூகம் என தெரிவித்தார்.



விழுப்புரம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் அருகே உள்ள மேல்பாடி கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் வகுப்பினை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலை தங்கள் பகுதியில் தனி வாக்குச்சாவடி அமைக்க கோரி விழுப்புரம் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்க வந்தனர்

# தி.மு.க.விற்கு தோல்வி பயம் வந்துவிட்டது: எடப்பாடி பழனிசாமி



மதுராந்தகம்: மார்ச். 31

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் அ.தி.மு.க. சார்பில் இன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்று பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

தி.மு.க.விற்கு தோல்வி பயம் வந்துவிட்டது. அ.தி.மு.க. கூட்டணி பற்றி தி.மு.க. ஏன் கவலைப்பட வேண்டும்?

பா.ஜ.க.வுடன் கூட்டணியை முறித்துக் கொண்ட பிறகும் கள்ளக் கூட்டணி என ஸ்டாலின் விமர்சித்து வருகிறார். யாருடனும் கள்ளக்கூட்டணிவைக்க வேண்டிய அவசியம் அ.தி.மு.க.விற்கு இல்லை. தி.மு.க.வில் ஸ்டாலின் குடும்பத்தினரை தவிர வேறு யாராவது பதவிக்கு வர முடியுமா?

இந்தியாவிலேயே ஜனநாயகத்துடன் இயங்கும் கட்சி அ.தி.மு.கதான்.

அரிசிஉள்ளிட்டமளிகை பொருட்களின் விலை தி.மு.க. ஆட்சியில் உயர்ந்துவிட்டன.

கொரோனா காலத்தில் கூட அ.தி.மு.க. ஆட்சியில் விலைவாசி உயராமல் பார்த்துக் கொண்டோம் என தெரிவித்தார்.

# சிவசேனா UBT கட்சி சார்பில் ஆதரவு அளித்து மாவட்ட தலைவர் கே.ஜி. சத்தி வேலன் தலைமையில் 300 மேற்பட்டோர் கலந்துகொண்டு நாடாளுமன்ற வேட்பாளர் சுப்புராயன்க்கு உற்சாக வரவேற்பு



திருப்பூர், மார்ச். 31

சிவசேனா UBT கட்சி சார்பில் ஆதரவு அளித்து மாவட்ட தலைவர் கே,ஜி, சத்தி வேலன் தலைமையில் 300 மேற்பட்டோர் கலந்துகொண்டு நாடாளுமன்ற வேட்பாளர் சுப்புராயன்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

நாடாளுமன்ற தேர்தலில் சிவசேனா UBT அணியினர்திராவிடமுன்னேற்ற கழகத்திற்கு முழு ஆதரவு அளிப்பதாக தெரிவித்திருந்த நிலையில் அதன் மாநிலத் தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் மாநில பொதுச் செயலாளர் சுந்தர வடிவேலன் ஆணைக்கிணங்க இந்தியா கூட்டணிக்கு நாடாளுமன்ற வேட்பாளர் சுப்புராயன் அவர்களை சந்தித்து திருப்பூர் மாவட்ட தலைவர் கே ஜி சக்திவேலன் தலைமையில் சிவசேனா UBT கட்சி சார்பில் 300க்கு மேற்பட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர் திருப்பூர் மாவட்ட தலைவர் கே.ஜி.சக்திவேலன் தலைமையில் மாநில மாவட்ட பொதுச் செயலாளர் வினோத் குமார் மற்றும் தெற்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார் மற்றும் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் பரமசிவம் தெற்கு மாநகரச் செயலாளர் கணேஷ் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் முழு ஆதரவையும் அளிப்பதாகவும் மேலும் திருப்பூரில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் தோழர் சுப்புராயன் அவர்களை வெற்றி பெற அயராது பாடுபடுவோம் என தெரிவித்தனர் .

திருப்பூர் 35 வது வார்டு கே பி என் காலனி பகுதியில் பொதுமக்களிடம் ஓட்டு சேகரிக்கும் போது சிவசேனா UBT கட்சி சார்பில் மாவட்ட தலைவர் கே ,ஜி, சக்திவேலன் உடன் இருந்து பொதுமக்களிடம் கதிர் அருவாள் சின்னத்திற்கு பெரும் வரியான ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற செய்வோம் என்று கூறினார்

# வேப்பம்பட்டு ரெயில் நிலையத்தில் பாதியில் நிற்கும் சுரங்கப்பாதை திட்டம்



திருவள்ளூர், மார்ச். 31

திருவள்ளூர் அருகே உள்ளது வேப்பம்பட்டு ரெயில் நிலையம். இந்த ரெயில் நிலையத்தில் தண்டவாளத்தை கடந்து செல்ல உயர்மட்ட மேம்பாலம், சுரங்கநடைபாதை வசதிகள் இல்லை. இதனால் வேப்பம்பட்டு ரெயில் நிலையத்திற்கு வரும் பயணிகள்நடைமேடைகளுக்கு செல்ல தண்டவாளத்தை கடந்து செல்லும் நிலை உள்ளது. இதனால் ரெயில் நிலையத்தில் அடிக்கடி ரெயில் மோதி அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்து வருகிறார்கள்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வேப்பம்பட்டு ரெயில் நிலையத்தில் தண்டவாளத்தை கடக்க முயன்ற ஒரேகுடும்பத்தை சேர்ந்த தந்தை மற்றும் மகள்கள் பலியானார்கள்.

இதைத்தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரபுசங்கர் வேப்பம்பட்டுரெயில்நிலையத்தில் ஆய்வு செய்தார். அப்போது கடந்த 10 ஆண்டுகளாக பாதியில் நிறுத்தப்பட்டுள்ள ரெயில்வே மேம்பால பணிகள் மற்றும் சுரங்கப்பாதை பணிகளை மீண்டும் தொடங்கி உடனடியாக முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். மேலும் மேம்பால பணிகள் மற்றும் ரெயில் நிலையத்தில் பணிகள் முடிவடையும் வரை தண்டவாளத்தை கடக்கும் பயணிகளுக்கு முன் எச்சரிக்கை செய்வதற்கு 24 மணி நேரமும் ஒலிபெருக்கி மற்றும் காவலர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இதையடுத்து ரெயில்வே மேம்பாலம் பணிக்கு நிலம் எடுப்புக்கான தடை நீக்கப்பட்டது.

இந்த பணியை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் முடிக்க கூடுதலாக ரூ.24 கோடி 18 லட்சத்து 83 ஆயிரத்து 895 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் ரெயில்வே மேம்பால கட்டுமான பணி மீண்டும் தொடங்கி நடந்து வருகிறது.

ஆனால் அங்கு பாதியில் நிறுத்தப்பட்டு இருந்த ரெயில்வே சுரங்கப்பாதை பணி மீண்டும் தொடங்கப்படவில்லை. கட்டி முடிக்காமல் பாதியில் நிற்கும் ரெயில்வே சுரங்கப்பாதை முழுவதும் புதர் மண்டியும், கழிவுநீரால் சூழப்பட்டும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு ரெயில் நிலையத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு ரெயில்வே ரூ.1.54 கோடி ஒதுக்கீடு செய்து. இதுவரை ரூ.38 லட்சம் செலவிடப்பட்டு பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டு உள்ளன. இந்த பணியை முழுமையாக செய்வதற்கும்,நிலஎடுப்பு தொடர்பாகவும் மாவட்ட கலெக்டர் பிரபுசங்கர் அறிவுரைகள் வழங்கிய நிலையில் பணிகள் தொடங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. எனவே கழிவு நீர் சூழ்ந்து காணப்படும் சுரங்கப்பாதை பணியை விரைந்து முடித்து அதனை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இதுகுறித்து ரெயில் பயணிகள் கூறும்போதும், இதுகுறித்து வேப்பம்பட்டு பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி விஸ்வநாதன் கூறும்போது "வேப்பம்பட்டு ரெயில்வே மேம்பால பணி நிறுத்தப்பட்ட பின்னர் தற்போது 10 ஆண்டுக்கு பிறகு மீண்டும் தொடங்கி உள்ளது. ஆனால் வேப்பம்பட்டு ரெயில் நிலைய சுரங்கப்பாதை அமைக்கும் பணி தொடங்கப்படாமல் கிடப்பில் போட்டு உள்ளனர். இதனால் ரெயில்நிலையத்திற்கு வரும் கல்லூரிகள் மற்றும் பள்ளிகளுக்கு செல்லும் மாணவமாணவிகள், முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் பொதுமக்கள், ஆபத்தான முறையில் தண்டவாளத்தை கடந்து செல்லவேண்டிய சூழல் உள்ளது. இதனால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே சுரங்கப்பாதை பணியை விரைவில் தொடங்கி முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

# தவணைத்தொகை கேட்டு வற்புறுத்தல்: மூதாட்டி தற்கொலை முயற்சி



மதுரை, மார்ச். 31

மதுரை மாவட்டம் சமயநல்லூர் பகுதியில் உள்ள பவுர் ஹவுஸில், பாண்டியம்மாள் என்பவர் தனியார் சோலைமலை பைனான்ஸ் நிறுவனத்தினரிடம் இருந்து 15 இலட்சம் கடன் வாங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து செல்வம் மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத மற்றொருவர் வீட்டில் வாசலில் நின்று கொண்டு இரண்டு மணி நேரத்திற்கு மேலாக தவணைத் தொகை 60 ஆயிரம் பணம் கேட்டு வற்புறுத்தி உள்ளனர். இதனைத் தொடர்ந்து பாண்டியம்மாள் மனம் உடைந்து எறும்புசாக்பீஸைகரைத்து குடுத்து உள்ளார். மேலும் சமயநல்லூர் (பரவை) காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். தற்போது பாண்டியம்மாள் அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# சத்தியமங்கலம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் புனித வெள்ளி அனுசரிப்பு





செஞ்சி, மார்ச். 31

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சத்தியமங்கலம் புனித அந்தோணியார் ஆலயத்தில் புனித வெள்ளி அனுசரிக்கும் வகையில், சிலுவைப்பாதை நிகழ்வு நடைபெற்றது.

உலகம் முழுவதும் உள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, உலக மக்களை ரட்சிக்க வந்த இயேசு, யுத மன்னன் பிலாத்துவால் தலையில் முள் கிரீடம் அணிவித்து, கல்வாரி மலைக்கு சிலுவையுடன் இழுத்துச் செல்லப்பட்டு, சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.அச்சமயத்தில் அவர் கூறிய ( ஏலி ஏலி லாமா சபக்தானி ) என் தேவனே என் தேவனே என் என்னை கைவிட்டீர் என்ற வாசகம் கூறி கிறித்துவ பாடல்கள் பாடப்பட்டு வேண்டுதல் செய்து இந்த நாளை வருடந்தோறும் புனித வெள்ளியாக அனுசரித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, சத்தியமங்கலத்தில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் புனித வெள்ளியையொட்டி பெரிய சிலுவைப்பாதை நிகழ்வு நடைபெற்றது.

இத்திருத்ததலத்தின் பங்குத்தந்தை அருட் A.சிறில் தலைமையில் நடைபெற்ற இந்த பெரிய சிலுவைப் பாதையின் போது, இயேசுநாதர் சிலுவையை சுமந்து சென்ற கல்வாரி மலையில் ஆணி அறைந்து கொல்லப்பட்ட தன் நினைவாக, சத்தி உள்பட பலர் கலந்து கொன்டனர்.

# விருதுநகர் மாவட்டம் மக்களவை பொதுத்தேர்தல் ஊரகப் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு வரைபடங்கள்




விருதுநகர், மார்ச். 31

மக்களவை பொதுத்தேர்தல் 2024 வருகின்ற ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, 18 வயது நிரம்பிய வாக்காளர்கள், அனைவரும் 100 சத விகிதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துக் கூறும் வகையில் மாவட்டத்திலுள்ள ஊரகம், நகர்புறம், பேரூராட்சிகள், மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலமும், பதாதைகள், சுவரொட்டிகள், வாகனங்களில் ஒட்டு வில்லைகள், உணவகங்கள், பல்பொருள் அங்காடிகளில் பொதுமக்கள் வாங்கும் பொருட்களில் தேர்தல் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டு வில்லைகள் மூலம் தொடர்ச்சியாக விழிப்புணர்வுகள் பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக சிவகாசி ஊராட்சி ஒன்றியம், ஆனையூர் கிராம ஊராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு வரைபடங்கள் வரையப்பட்டு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்று மாவட்டத்தின் பல்வேறு ஊரக பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் விழிப்புணர்வு வரைபடங்கள் வரையப் பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

இந்த ஜனநாயக திருவிழாவில் 18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும், வாக்களிப்பதன் மூலம் தங்களது பங்களிப்பை வழங்கி மாவட்டத்தில் 100 சதவிகிதம் வாக்குப்பதிவு இலக்கை அடைய ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# ஒட்டன்சத்திரத்தில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் திண்டுக்கல் பாராளுமன்ற எஸ்.டி.பி.ஐ வேட்பாளர் அறிமுக கூட்டம்

ஒட்டன்சத்திரம் மார்ச் 31

திண்டுக்கல் மாவட்டம் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற அ.இ.அ.தி.மு.க கூட்டணியில் (எஸ்.டி.பி.ஐ) இந்திய சமுக ஜனநாயக கட்சியின் வேட்பாளர் நெல்லை முகமது முபாரக் அறிமுக கூட்டம் ஒட்டன்சத்திரம் நகரத்தில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும் அம்பிளிக்கை ஊராட்சி மன்ற தலைவருமான என்.பி.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் முன்னால் அமைச்சர்கள் நத்தம் இரா.விஸ்வநாதன், திண்டுக்கல் சீனிவாசன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். இதில் அதிமுக முன்னால் பழனி சட்டமன்ற உறுப்பினர் வேணுகோபால், திண்டுக்கல் முன்னால் மேயர் மருதராஜ், பொது குழு உறுப்பினர் உதயம் ஏ.ராமசாமி, மாவட்ட பொருளாளர் எஸ்.எ.பழனிவேல், ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றிய செயலாளர் பி.பாலசுப்பிரமணி, நகர செயலாளர் எஸ்.நடராஜன், தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் அப்பன்(எ) கருப்புச்சாமி, கீரனூர் பேரூர் கழக செயலாளர் குப்புச்சாமி, தேமுதிக திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிவக்குமார, புதிய தமிழக கட்சி பொறுப்பாளர் விஜயகுமார், எஸ்.டி.பி.ஐ மேற்கு மாவட்ட தலைவர் ஹைசர் அலி, ஒட்டன்சத்திரம் பொறுப்பாளர் அப்பாஸ் அலி, ஆதி தமிழர் முன்னேற்றக்கழகம் முருகன் மற்றும் அதிமுக மாவட்ட, ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் கூட்டணி கட்சியை சார்ந்த பொறுப்பாளர்கள், கட்சி தொண்டர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் பங்குனி மாத திருக்கல்யாண திருவிழா சிறப்பாக நடைபெற்று விழாவின் கடைசி நாளன்று ஆண்டாள் ரங்க மன்னார் தம்பதிகளுக்கு சன்னதியில் வைத்து பிரம்மாண்டமான புஷ்பையாகம்வைபவம் நடைபெற்றது அர்ச்சகர் சுதர்சன பட்டர் தலைமையில் அர்ச்சகர்கள் கலந்து கொண்டு நடத்தி வைத்தனர்ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழு தலைவர் பி ஆர் வெங்கட்ராமராஜா தலைமையில் அறங்காவலர்களும் கோவில் அலுவலர்களும் திருக்கோவில் பணியாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# கரூர் மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம்

கரூர், மார்ச். 31

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கரூர் நாடாளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொதுப் பார்வையாளர் ராகுல் அசோக் ரெக்காவர் மற்றும் செலவின பார்வையாளர் போஸ் பாபு அல்லி. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேர்தல் பொதுப் பார்வையாளர் தெரிவித்ததாவது, இந்தியத்தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி தமிழகத்தில் மக்களவை பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளது. கரூர் மாவட்டத்தில் வரும் 19.04.2024 அன்று வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. தேர்தல் அமைதியான முறையில் நடத்திட மனிதவளம், பயிற்சி, போக்குவரத்து, சட்டம் ஒழுங்கு, தேர்தல் விழிப்புணர்வு, மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மேலாண்மை, செலவீன கண்காணிப்பு, வாக்குச்சிட்டு மற்றும் தபால் வாக்கு அச்சடித்தல், ஊடக கண்காணிப்பு




மையம் என ஒவ்வொரு பணிக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் அவர்களுக்கான பணிகளை எவ்வித தொய்வுமின்றி சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பறக்கும் படை குழு மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் தொடர் தணிக்கையில் ஈடுபட வேண்டும். தேர்தல் விதிமுறைகள் மீறல் குறித்து தொலைபேசி மற்றும் ஊ ஏபைடை செயலியில் வரும் புகார்களுக்கு உடனுக்குடன் விரைந்து தீர்வு காண வேண்டும்.

முன்னதாக, நடைபெறவுள்ள மக்களவைத் பொதுத்தேர்தலில் கரூர் மக்களவைத்தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையமான தளவாபாளையம் எம்.குமாரசாமி பொறியியல் கல்லூரியில் கரூர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், வேடச்சந்தூர், மணப்பாறை, விராலிமலை ஆகிய சட்டமன்றத் தொகுதிவாரியாக வாக்கு எண்ணும் மையத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களில் வாக்கு எண்ணும் அறைகள் அமைக்கப்பட உள்ளது. வாக்கு எண்ணும் அறைகள் குறித்தும், வாக்குப்பதிவு முடிந்தபிறகு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்காக அறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், வாக்குப்பதிவு முடிந்து அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் இருந்தும் கொண்டுவரப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான இடம் குறித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்டு வரும் வாகனங்களுக்கு போக்குவரத்து இடையூர் ஏற்படாத வகையில் வாகனங்கள் எந்த வழியே வந்து எந்த வழியே செல்ல வேண்டும் என்பது குறித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் விரிவாக தேர்தல் பொது பார்வையாளர் ராகுல் அசோக் ரெக்காவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இக்கூட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் (நிலமெடுப்பு) விமல்ராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் தேர்தல் பார்வையாளர் பொறுப்பு அலுவலர் ஸ்ரீலேகா தமிழ்செல்வன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும் கரூர் வருவாய் கோட்டாட்சியருமான முகமது பைசூல், தனி துணையாட்சி சமூக பாதுகாப்புத் திட்டம் சைபுதீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சையது காதர், தேர்தல் வட்டாட்சியர் முருகன் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.




இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி புதுக்கோட்டை மாவட்ட கலெக்டரகத்தில் பாராளுமன்ற பொது தேர்தல் 2024 தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறை, ஊரக மையம், ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு செயல்பாடுகளை சிவகங்கை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருமயம் சட்டமன்ற தொகுதி மற்றும் ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் சிவகங்கை பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் ஹரிஷ் மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் மெர்சி ரம்யா, காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டார்.

# வடுகபட்டி கிராமத்தில் ஸ்ரீ பகவதிஅம்மன், ஸ்ரீ முத்தாலம்மன், திருக்கோவில் 48 வது நாள் மண்டல பூஜை

அலங்காநல்லூர். மார்ச் 31

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் த.வடுகபட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பகவதிஅம்மன், ஸ்ரீ முத்தாலம்மன், திருக்கோவில் கும்பாபிஷேக விழாவினை முன்னிட்டு 48 நாள் மண்டல பூஜை நடைபெற்றது. யாக சாலை பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து மங்கல இசை முழங்க கோபூஜை, கணபதி பூஜை உள்ளிட்ட சிறப்பு அபிஷேக ஆராதனைகள் யாக வேள்விகள் தீபாராதனை நடைபெற்றது. இதைத்தொடர்ந்து ராமேஸ்வரம், அழகர்கோவில், உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து



கொண்டு வரப்பட்ட புனித நீர் யாகசாலையை சுற்றி வலம் வந்து கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு 48 வது நாள் மண்டல பூஜை நடைபெற்றது

இதனை தொடர்ந்து கோவில் கருவறையில் அமைந்துள்ள ஸ்ரீ பகவதிஅம்மன், ஸ்ரீ முத்தாலம்மன், ஆகிய சுவாமிகளுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விழாவிற்கு வருகை தந்த சுற்றுவட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை மலர்களும் அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை முத்தாலபகவதிஅம்மன் பரிபாலனை அறக்கட்டளை மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

# இந்தியா கூட்டணி நெல்லை தொகுதி தேர்தல் பணிக்குழு அலுவலகம் திறப்பு விழா

நெல்லை, மார்ச். 31

இந்தியா கூட்டணியின் நெல்லை பாராளுமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு அலுவலகம் திறப்பு விழா இன்று காலை நெல்லை பைபாஸ் ரோட்டில் மத்திய மாவட்ட திமுக அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

நெல்லை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஆவுடையப்பன் திறந்து வைத்தார். மத்திய மாவட்ட செயலாளர் டிபிஎம் மைதீன் கான், தென்காசி மாவட்ட செயலாளர் ஜெயபாலன், வேட்பாளர் ராபர்ட் புரூஸ்



ஞானதிரவியம் .. பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் கே.எஸ்.ரசூல் மைதீன் மாவட்ட பொருளாளர் தேயிலை மைதீன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட, பகுதி, நகர, நிர்வாகிகள், மற்றும் முன்னாள் க்கள் விஜிலா சத்தியானந் ஹெலன், லெட்சுமணன், மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர், 12 வது வட்ட செயலாளர் மேகை செல்வம், இந்தியா கூட்டணி கட்சிகள் காங்கிரஸ் கட்சி மாநகர் மாவட்ட தலைவர் சங்கரபாண்டியன் தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயக்குமார் மதிமுக மாவட்ட செயலாளர் நிஜாம் சிபிஎம் மாவட்ட செயலாளர் ராம் சிபிஐ மாவட்ட செயலாளர் சடையப்பன், காசி விஸ்வநாதன், முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் எல்.கே.எஸ்.மீரான் மைதீன், பாட்டபத்து முகம்மது அலி, விசிக மாவட்ட செயலாளர்கள் எம்.சி.சேகர், முத்து வளவன், உள்ளிட்ட தோழமை கட்சி நிர்வாகிகள் திமுக முன்னணியினர். திரளாக கலந்து கொண்டனர்.

# விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி 264 -வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட வருவாய் அலுவலர் மாலை அணிவித்து மரியாதை

இராமநாதபுரம், மார்ச்.31

இராமநாதபுரம் மாவட்டம் விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் 264 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

விடுதலைப்போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் 264 வது பிறந்த தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை



செலுத்தினார். அதனைத்தொடர்ந்து உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.சிவானந்தம், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். விடுதலைப்போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் சுதந்திர தியாகத்தை போற்றும் விதமாக அன்னாரின் பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி அவரது 264வது பிறந்தநாளன்று அன்னாரின் திருவுருவச்சிலைக்கு அரசு சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.சிவானந்தம், மாலை அணிவித்து மலர் துவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.லெ. பாண்டி அவர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.நா.விஜயகுமார் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலையொட்டி தேனி பங்களா மேட்டில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மற்றும் தமிழ்நாடு அரசு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் இணைந்து நூறு சதவிகிதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நேரு சிலை வரை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை மாவட்ட தேர்தல் நடத்து அலுவலரும் மாவட்ட கலெக்டருமான ஆர்.வி.ஷஜீவனா துவக்கி வைத்தார்

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
31.3.2024

# வேட்டையாடு விளையாடு பட நடிகர் டேனியல் பாலாஜி மரணம் ரசிகர்கள் அதிர்ச்சி



கமல்ஹாசன் கதாநாயகராக நடித்த வேட்டையாடு விளையாடு படத்தில் வில்லனாக நடித்து பிரபலமானவர் டேனியல் பாலாஜி (வயது 48). இவர் பொல்லாதவன், காக்க காக்க, பைரவா உள்பட பல்வேறு படங்களில் நடித்துள்ளார்.

இந்நிலையில், நடிகர் டேனியல் பாலாஜிக்கு நேற்று இரவு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இதன் காரணமாக அவர் சென்னை கொட்டிவாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் டேனியல் பாலாஜி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவர் மாரடைப்பால் உயிரிழந்ததாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். டேனியல் பாலாஜி மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# இயக்குனர் அமீர் நடித்துள்ள 'உயிர் தமிழுக்கு' படத்தின் டீசர் வெளியானது



'உயிர் தமிழுக்கு' படத்தை மூன் பிக்சர்ஸ் சார்பில் தயாரிப்பாளர் ஆதம்பாவா தயாரித்து இயக்கியுள்ளார்.

இயக்குனர் அமீர் கதாநாயகனாக நடித்துள்ள படம் 'உயிர் தமிழுக்கு'.இப்படத்தைமூன்பிக்சர்ஸ்சார்பில்தயாரிப்பாளர் ஆதம்பாவா தயாரித்து இயக்கியுள்ளார். இப்படத்தில் சாந்தினி ஶ்ரீதரன், ஆனந்தராஜ், இமான் அண்ணாச்சி, மாரிமுத்து, ராஜ் கபூர், சுப்ரமணியசிவா, மகாநதி சங்கர், ராஜசிம்மன், சரவணசக்தி உள்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

வித்யாசாகர் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு தேவராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் வெளியீட்டு உரிமையை சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் புரொடக்சன் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. இந்த நிலையில், 'உயிர் தமிழுக்கு' திரைப்படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த டீசர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஓடிடியில் வெளியானது 'போர்' திரைப்படம்




அர்ஜூன் தாஸ் மற்றும் காளிதாஸ் ஜெயராம் முன்னணி கதாப்பத்திரத்தில்நடித்துமார்ச்1ம்தேதிதிரையரங்குகளில் வெளிவந்த படம் போர். தமிழ் இந்தி என இரு மொழிகளிலும் இப்படம் வெளியானது. இந்தியில் டாங்கி என்ற பெயரில் வெளியானது. பிஜாய் நம்பியார் இப்படத்தை இயக்கினார். மக்களிடையே இப்படம் கலவையானவிமர்சனத்தைபெற்றது.சஞ்சனாநட்ராஜன், பானு, ஜான் விஜய், விவேக் ராஜகோபால் போன்ற முன்னணி நடிகர்கள் நடித்து இருந்தனர். காலேஜில் படிக்கும் சீனியருக்கும் ஜூனியருக்கும் இடையே இருக்கும் ஈகோ, துரோகம் பற்றிய கதைக்களமாக அமைந்தது. இந்த நிலையில் இப்படம் ஓடிடி தளமான நெட்ப்லிக்ஸில் இன்று வெளியாகியுள்ளது.

# மின்சார ரெயிலில் சமோசா விற்கும் பெண் தொழிலாளிக்கு நடிகர் பாலா ஆட்டோ பரிசளித்துள்ளார்



சின்னத்திரையில் ஒளிபரப்பான 'குக் வித் கோமாளி' நிகழ்ச்சி மூலம் பிரபலமடைந்தவர் நடிகர் பாலா. இவர் ஆதரவற்ற முதியோர்கள், ஆதரவற்ற குழந்தைகள் உள்ளிட்டோருக்கான காப்பகங்கள் நடத்தி வருவதுடன் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் பொதுமக்களுக்கு தொடர்ந்து செய்து வருகிறார். அவர் தன்னுடைய சொந்த செலவில் மலை கிராம மக்களுக்கு 4 இலவச ஆம்புலன்ஸ்களை வாங்கி கொடுத்திருக்கிறார்.

மிக்ஜம் புயலால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து சுமார் 200 குடும்பங்களுக்கு தலா ரூ.1,000 கொடுத்து உதவினார். செங்கல்பட்டு மாவட்டம் கோட்டை கயப்பாக்கம் என்ற கிராமத்தில் ரூ.3 லட்சம் செலவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்து கொடுத்தார்.

சமீபத்தில் பெட்ரோல் பங்க் ஊழியருக்கு பைக் பரிசளித்திருந்தார். இந்நிலையில், மின்சார ரெயிலில் சமோசா விற்கும் பெண் தொழிலாளிக்கு நடிகர் பாலா ஆட்டோ பரிசளித்துள்ளார். இதனை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ பகிர்ந்து தெரிவித்துள்ளார். அதனுடன் பகிர்ந்த பதிவில்,

அந்த அக்காவின் பெயர் முருகம்மாள். அவருக்கு திருமணமாகி சில வருடங்களிலேயே அவரது கணவர் உயிரிழந்துவிட்டார். இவருக்கு 3 மகள்கள் உள்ளனர். இவர் மின்சார ரெயிலில் சமோசா விற்று வருகிறார். இவரது ஆசை சொந்தமாக ஆட்டோ வாங்கி ஓட்டவேண்டும் என்பதுதான். இவரது இந்த ஆசை என்னுடைய ரோல் மாடலான ராகவா லாரன்ஸ் மாஸ்டர் உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.


# ஜி.வி. பிரகாஷ் நடித்துள்ள 'கள்வன்' படத்தின் புதிய பாடல் வெளியானது



பி.வி.ஷங்கர் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'கள்வன்'. இந்த திரைப்படத்தின் கதையை ரமேஷ் அய்யப்பன் மற்றும் பி.வி.ஷங்கர் எழுதியுள்ளனர். இந்த படத்தில் பாரதிராஜா, இவானா, தீனா, ஜி.ஞானசம்பந்தம், வினோத் முன்னா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். டில்லி பாபு தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். பி.வி ஷங்கர் ஒளிப்பதிவு செய்துள்ளார். 'கள்வன்' படம் ஏப்ரல் 4ம் தேதி திரையரங்குகளில்வெளியாகஉள்ளது.சமீபத்தில்இந்தபடத்தின் டிரைலர் மற்றும் சில பாடல்கள் வெளியாகி கவனம் பெற்றது.

இந்த நிலையில் இந்த படத்தின் புதிய பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'அடி கட்டழகு கருவாச்சி' என்ற பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. மாயா மகாலிங்கம் மற்றும் ஏகாதசி எழுதியுள்ள இந்த பாடலை ஜி.வி.பிரகாஷ் பாடியுள்ளார். இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது

# அர்னால்டுக்கு 'பேஸ் மேக்கர்' சிகிச்சை...புகைப்படம் வெளியிட்ட அர்னால்டு



அமெரிக்காவில் புகழ் பெற்ற பாடி பில்டராக இருந்து வந்த அர்னால்டு 1970ல் வெளியான 'ஹெர்குலஸ் இன் நியூயார்க்' படம் மூலம் நடிகராக அறிமுகமானார். பினனர் 1984ல் வெளியான 'தி டெர்மினேட்டர்' மூலம் ஆக்ஷன் ஹீரோவாக உருவெடுத்தார். உலகளவில் இளைஞர்கள் ஜிம்முக்கு செல்ல காரணமே அர்னால்டுதான்.

அர்னால்டுக்கு இப்போது 76 வயதாகிறது. அவருக்கு இதயப்பிரச்சினைகாரணமாகபேஸ்மேக்கர்சிகிச்சைநடந்திருக்கிறது. இந்த விஷயம் அவரது ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்நிலையில், பேஸ் மேக்கர் சிகிச்சை குறித்து அவர் தனது எக்ஸ் தளப்பதிவில், நன்றி! நான் உலகம் முழுவதிலுமிருந்து பல வகையான செய்திகளைப் பெற்றுள்ளேன், ஆனால் அதில் முக்கியமாக இது எனது பூபர் சீசன் 2 ல் ஏதேனும் சிக்கல்களை ஏற்படுத்துமா என்று பலர் கேட்டுள்ளனர். நிச்சயமாக இல்லை. ஏப்ரலில் படப்பிடிப்புக்கு செல்ல நான் தயாராக இருப்பேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# மியாமி ஓபன் டென்னிஸ்; மெத்வதேவை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறிய சின்னெர்



அமெரிக்காவில் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இந்த தொடரில் இன்று ஆண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றது. இதில் ஒரு அரையிறுதி ஆட்டத்தில் ரஷியாவின் டேனியல் மெத்வதேவ் ஜன்னிக் சின்னெரை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6–1, 6–2 என்ற செட் கணக்கில் மெத்வதேவை வீழ்த்தி சின்னெர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

# சர்வதேச பெண்கள் செஸ் போட்டி: இந்திய வீராங்கனை மேரி ஆன் கோம்ஸ் 'சாம்பியன்'



தமிழ்நாடு செஸ் சங்கம் சார்பில் வேலம்மாள் கல்வி நிறுவனம் ஆதரவுடன் சர்வதேச பெண்கள் கிராண்ட்மாஸ்டர் செஸ் போட்டி சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நடந்தது. 11 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில் 12 வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இதன் கடைசி சுற்றில் வெள்ளை நிற காய்களுடன் ஆடிய இந்திய வீராங்கனை மேரி ஆன் கோம்ஸ் 39வது நகர்த்தலில் சக நாட்டு வீராங்கனை மோனிகா அக்ஷயாவை வீழ்த்தினார். இதன் மூலம் கொல்கத்தாவை சேர்ந்த மேரி ஆன் கோம்ஸ் 9 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார். டைபிரேக்கர் புள்ளி அடிப்படையில் மங்கோலியா வீராங்கனை எங்துல் அல்தான் உல்ஜி ($7\frac{1}{2}$ புள்ளி) 2வது இடமும், இந்திய வீராங்கனை வேல்புலா சரயு ($7\frac{1}{2}$ புள்ளி) 3வது இடமும் பெற்றனர்.

பரிசளிப்பு விழாவில் அகில இந்திய செஸ் சம்மேளனத்தின் செயலாளர் தேவ் படேல் சிறப்பு விருந்தினராக வருகை தந்து பரிசுக்கோப்பையை வழங்கினார். முதல் 3 இடங்களை பிடித்தவர்களுக்கு முறையே ரூ.$2\frac{1}{2}$ லட்சம், ரூ.$1\frac{1}{2}$ லட்சம், ரூ.1.30 லட்சம் பரிசாக வழங்கப்பட்டது. அகில இந்திய செஸ் சம்மேளன துணைத் தலைவர் ஆனந்தா, முன்னாள் துணைத்தலைவர் பாவேஷ் படேல், தமிழ்நாடு செஸ் சங்க செயலாளர் ஸ்டீபன் பாலசாமி உள்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

# மியாமி ஓபன் டென்னிஸ்: பெண்கள் ஒற்றையர் பிரிவில் ரைபகினா இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



அமெரிக்காவில் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி போட்டி ஒன்றில் கஜகஸ்தான் முன்னணி வீராங்கனையான ரைபகினா, பெலாரசை சேர்ந்த விக்டோரியா அசரென்கா உடன் மோதினார்.

இதில் முதல் செட்டை ரைபகினா கைப்பற்றிய நிலையில்,2வதுசெட்டைஅசரென்காகைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற 3வது செட்டை டை பிரேக்கர்வரை போராடி ரைபகினா கைப்பற்றி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இந்த ஆட்டத்தில் ரைபகினா 6–4, 0–6 மற்றும் 7–6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.


இவர் இறுதிப்போட்டியில் அமெரிக்க வீராங்கனையான டேனியல் காலின்சுடன் பலப்பரீட்சை நடத்த உள்ளார்.

# ஐ.பி.எல் தொடரில் பெங்களூருவில் நடைபெற்ற 10வது லீக் ஆட்டத்தில் ஆர்.பி.சி கே.கே. ஆர் அணிகள் மோதின.



ஐ.பி.எல் தொடரில் பெங்களூருவில் நேற்று நடைபெற்ற 10வது லீக் ஆட்டத்தில் ஆர்.பி.சி கே.கே. ஆர் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் ஆடிய பெங்களூரு 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 182 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய கொல்கத்தா நரைன், பில் சால்ட், வெங்கடேஷ் ஐயர், ஸ்ரேயஸ் ஐயர் ஆகியோர் அதிரடியின் மூலம் 16.5 ஓவர்களிலேயே 3 விக்கெட்டை மட்டும் இழந்து 186 ரன் எடுத்து வெற்றி பெற்றது. இந்நிலையில் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின் கொல்கத்தா வீரர் வெங்கடேஷ் ஐயர் அளித்த பேட்டியில் கூறியதாவது, உண்மையை சொல்ல வேண்டுமெனில் போட்டி நடைபெற நடைபெற அது நன்றாக மாறியது. குறிப்பாக பெவிலியன் பக்கம் நன்றாக மாறியது. சுனில் நரேனுக்கு பாராட்டுக்கள். அவர் விளையாடியதால் ஆரம்பத்திலேயே அழுத்தம் குறைந்தது. எனவே கடைசியில் நாங்கள் சம்பிரதாயங்களை முடித்தோம். ஓப்பனிங்கில் கிடைத்த நல்ல தொடக்கத்தை பயன்படுத்துவது மிகவும் முக்கியம். எதிரணி இடது கை ஸ்பின்னரை பயன்படுத்தும் போது அதை அதிரடியாக எதிர்கொள்வது என்னுடைய கடமை. இங்கே என்னுடைய வருங்கால மனைவியும் உள்ளார். என் ஆட்டத்திற்கான பாராட்டுக்களை அவருக்கும் நான் கொடுக்க விரும்புகிறேன். விஜயகுமார் நன்றாக பந்து வீசினார். அவரை எதிர்கொள்வது மட்டும் கொஞ்சம் கடினமாக இருந்தது. பிட்ச்சில் வேகத்தை குறைத்து வீசும் போது எதிர்கொள்வது கடினமாக இருந்தது. நாங்களும் வேகமாக பந்து வீசும் போது கடினமாக இருந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஒலிம்பிக் தொடக்க விழாவில் தேசிய கொடியை ஏந்தும் வாய்ப்பை நீரஜ் சோப்ராவுக்கு அளித்திருக்க வேண்டும் அஞ்சு ஜார்ஜ்



ஒலிம்பிக் விளையாட்டு போட்டி ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பாரீசில் நடக்கிறது. இந்த போட்டிக்கான தொடக்க விழாவில் இந்திய அணிக்கு தலைமை தாங்கி தேசிய கொடியை ஏந்தி செல்லும் கவுரவம் மூத்த டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமலுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தை சேர்ந்த சரத்கமலுக்கு இது 5வது ஒலிம்பிக் போட்டியாகும்.

இந்த நிலையில் டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் உலக தடகளத்தில் தங்கம் வென்று சரித்திரம் படைத்த இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு பாரீஸ் ஒலிம்பிக் தொடக்க விழாவில் தேசிய கொடியை ஏந்தும் வாய்ப்பை அளித்திருக்க வேண்டும் என்று முன்னாள் தடகள வீராங்கனையும், இந்திய தடகள சங்கத்தின் துணைத் தலைவருமான அஞ்சு ஜார்ஜ் கூறியுள்ளார்.

'இந்திய ஒலிம்பிக் சங்கம், 2024ம் ஆண்டு ஒலிம்பிக் தொடக்க விழாவில் இந்தியாவின் தேசிய கொடியை ஏந்தி செல்வதற்கு நமது தங்க மகன் நீரஜ் சோப்ராவின் பெயரை பரிசீலனை செய்யாதது ஆச்சரியம் அளிக்கிறது.

டேபிள் டென்னிஸ் உள்ளிட்ட தேசிய விளையாட்டு சங்கங்கள் இன்னும் ஒலிம்பிக் போட்டிக்கான தங்கள் அணியையே அறிவிக்காத நிலையில் சரத்கமல் தேர்வு செய்யப்பட்டு உள்ளார்' என்று அஞ்சு குறிப்பிட்டுள்ளார்.



**செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப் புடைத்து**

**விளக்கம்:**
**நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.